**செய்தி வெளியீடு எண்: 138** **நாள்: 17.02.2020**

# பத்திரிகைச் செய்தி

## <u>தென்னை மற்றும் பாக்கு மரங்களில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் தாக்குதலும் மேலாண்மை முறைகளும்</u>

தென்னை மற்றும் பாக்கு மரங்களில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ எனும் பூச்சியின் தாக்குதல் சமீப காலங்களில், கோயம்புத்துார், திருப்பூர், கன்னியாகுமரி, ஈரோடு சேலம், நாமக்கல், தஞ்சாவூர் மற்றும் கடலுார் போன்ற மாவட்டங்களில் காணப்படுகிறது.

வயதில் முதிர்ந்த பெண் வெள்ளை ஈக்கள், மஞ்சள் நிற முட்டைகளை, சுழல் வடிவ அமைப்புகளில் ஓலைகளின் அடிப்பாகத்தில் இடுகின்றன. இம்முட்டைகள், மெழுகு பூச்சுடன் காணப்படும். முட்டைகளில் இருந்து வெளிப்படும் இளங்குஞ்சுகள் இலைகளில் அடிப்பரப்பில் இருந்து கொண்டு இலைகளின் சாற்றினை உறிஞ்சி வளர்கின்றன. சுமார் 20 – 30 நாட்களில் முழு வளர்ச்சியடைந்த ஈக்களாக மாறி கூட்டம் கூட்டமாக தென்னை ஓலைகளின் அடிப்பகுதிகளில் காணப்படுகின்றன. இவைகள் காற்றின் திசையில் எளிதில் பரவி அடுத்தடுத்த தோட்டங்களில் உள்ள தென்னை மற்றும் பாக்கு மரங்களில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

### <u>தாக்குதல் அறிகுறிகள்</u>

குஞ்சுகளும், முதிர்ந்த ஈக்களும் தென்னை மற்றும் பாக்கு மரங்களின் ஓலைகளில் அடியில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதோடு, தேன் போன்ற திரவக் கழிவுகளையும் வெளியேற்றுவதால், கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் கரும்பூசணம் படர்ந்து காணப்படும்.

வெள்ளை ஈக்களானது, தென்னை மற்றும் பாக்கு மரங்களைத் தவிர, வாழை, சப்போட்டா ஆகிய பயிர்களிலும் தாக்குதல் ஏற்படுத்துகிறது. எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும், ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலும் பரவாமல் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையானது பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு வெள்ளை ஈக்கள் மேலாண்மை முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

### <u>வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த பின்பற்ற வேண்டிய மேலாண்மை முறைகள்</u>

- மஞ்சள் நிறம், வளர்ச்சியடைந்த வெள்ளை ஈக்களை கவரும் தன்மையுடையதால், மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களில் ஆன ஆமணக்கு எண்ணெய் தடவிய ஒட்டும் பொறிகளை (நீளம்

5 அடி அகலம் 1 1/2 அடி) ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில், 5–6 அடி உயரத்தில் ஆங்காங்கே கட்டிவைத்து வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

- **மஞ்சள் விளக்கு பொறிகளை** ஏக்கருக்கு 2 வீதம் தென்னை மற்றும் பாக்கு தோப்புகளில் அமைத்து மாலை வேளைகளில் 6 மணி முதல் 11 மணி வரை ஒளிரச் செய்வதன் மூலமும் வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.
- தாக்கப்பட்ட தென்னை மற்றும் பாக்கு மரங்களின் இலைகளின் மேல் தெளிப்பான்களை கொண்டு **வேகமாக நீரை அடிப்பதன் மூலம்** வெள்ளை ஈக்கள் மற்றும் கரும்பூசணங்களை அழிக்கலாம்.
- வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும்போது பொறிவண்டுகள், என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் போன்ற இயற்கை எதிரிகள் தோப்புகளிலேயே இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். **என்கார்ஸியா ஒட்டுண்ணிகள்** அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை பெருமளவு குறைக்கின்றது. என்கார்ஸியா ஒட்டுண்ணிகளானது, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் **ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில்** இருந்து பெறப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்களின் வாயிலாக, தென்னை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- **கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள்**, தென்னை மரங்களை தாக்கும் வெள்ளை ஈக்களின் இளம் குஞ்சுகளை நன்றாக உட்கொள்வதால், தாக்கப்பட்ட தோட்டங்களில் ஏக்கருக்கு 400 முட்டைகள் என்ற எண்ணிக்கையில் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகளின் முட்டைகளை விடுதல் நல்ல பயனளிக்கும். இந்த இரை விழுங்கிகளின் முட்டைகள் அடங்கிய அட்டையானது, **திருச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மத்திய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையம் மற்றும்** தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்டு, அந்தந்த பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களின் வாயிலாக, தென்னை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- அதிக அளவு பூச்சிக்கொல்லிகள் உபயோகிக்கும்போது நன்மை செய்யும் இயற்கை எதிரிகள் அழிந்து விடுவதால், இரசாயன பூச்சிக்கொல்லிகளை கண்டிப்பாக தவிர்த்து இயற்கை எதிரி பூச்சிகள் வளர்வதற்கு உரிய சூழலை மேம்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.

எனவே தென்னை விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களால் தாக்கப்பட்ட தென்னை மற்றும் பாக்கு தோப்புகளில் அவற்றினை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய மேலாண்மை முறைகள் தொடர்பான அறிவுரைகள்

### தாக்குதல் அறிகுறிகள்

ரூகோஸ் வெள்ளை ஈக்களின் குஞ்சுகளும் மற்றும் முதிர்ந்த ஈக்களும் தென்னை மற்றும் பாக்கு மர ஓலைகளின் அடியில் இருந்து சாற்றை உறிஞ்சுகின்றன. இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவக் கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுவதால் கரும் பூசணம் வளர்ந்து ஓலைகள் முழுவதும் கருமை நிறம் படர்கிறது.

### மேலாண்மை முறைகள்

- மஞ்சள் நிறம், வளர்ச்சியடைந்த வெள்ளை ஈக்களை கவரும் தன்மையுடையதால், மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் ஆன ஆமணக்கு எண்ணெய் தடவிய ஒட்டும் பொறிகளை (நீளம் 5 அடி அகலம் 1 1/2 அடி) ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் 5–6 அடி உயரத்தில் ஆங்காங்கே கட்டிவைத்து வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.
- மஞ்சள் விளக்கு பொறிகளை ஏக்கருக்கு 2 வீதம் தென்னை மற்றும் பாக்கு தோப்புகளில் அமைத்து மாலை வேளைகளில் 6 மணி முதல் 11 மணி வரை ஒளிரச் செய்வதன் மூலமும் வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.
- தெளிப்பான்களை கொண்டு தாக்கப்பட்ட தென்னை மற்றும் பாக்கு மரங்களின் இலைகளின் மேல் வேகமாக நீரை அடிப்பதன் மூலம் வெள்ளை ஈக்கள் மற்றும் கரும்பூசணங்களை அழிக்கலாம்.
- வெள்ளை ஈக்கள் அதிக அளவு பரவும்போது பொறிவண்டுகள், என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் போன்ற இயற்கை எதிரிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். **என்கார்ஸியா ஒட்டுண்ணிகள்** அதிக அளவு பெருகி வெள்ளை ஈக்களின் சேதத்தை பெருமளவு குறைக்கின்றன. என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் **ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில்** இருந்து பெறப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்களின் வாயிலாக, தென்னை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.
- **கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள்**, தென்னை மரங்களை தாக்கும் வெள்ளை ஈக்களின் இளம் குஞ்சுகளை நன்றாக உட்கொள்வதால், தாக்கப்பட்ட தோட்டங்களில் ஏக்கருக்கு 400 என்ற எண்ணிக்கையில் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகளின் முட்டைகளை விடுதல்

நல்ல பயனளிக்கும். இந்த இரை விழுங்கிகளின் முட்டைகள் அடங்கிய அட்டையானவை, **திருச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மத்திய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையம் மற்றும்** தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்டு, அந்தந்த பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களின் வாயிலாக, தென்னை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

- தென்னந்தோப்புகளில் தட்டைப் பயறு போன்ற பயறு வகை பயிர்களை ஊடுபயிராகவும், மஞ்சள் நிற பூக்கள் பூக்கும் சாமந்தி, சூரிய காந்தி போன்றவற்றை வரப்பு பயிராகவும் பயிர் செய்வதன் மூலம் நன்மை செய்யும் பூச்சிகளை கவர்ந்து இழுக்கலாம்.
- அதிக அளவு பூச்சிக்கொல்லிகள் உபயோகிக்கும்போது நன்மை செய்யும் இயற்கை எதிரிகள் அழிந்து விடுவதால், இரசாயன பூச்சிக்கொல்லிகளை கண்டிப்பாக தவிர்த்து இயற்கை எதிரி பூச்சிகள் வளர்வதற்கு உரிய சூழலை மேம்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.

•••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**